உ

கடவுள் துணை.

கண்ணாட்டிச் சிந்து.

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்

அவர்களது

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

மலசுத்தி லேகியம்.



இந்த லேகியத்தை ஐந்துவயது குழந்தைகள்முதல் விருத்தாப்பியர் வரையில் பெண்கள் புருஷர்கள் யாவரும் தின்னலாம். தின்பதற்குத்தகுந்த இனிப்பாயிருக்கும். இதன் பிரயோசனம் யாதெனில், கை கால் குடைச்சல், கெர்ப்பவாய்வு, மூலவாய்வு, அபானவாய்வு, குன்மவாய்வு, யெப்போதும் வயிற்றில் கோளாறாகவேயிருந்தால் மலச்சிக்கல், மலம்வாட்சி வயிற்றிலுள்ள எல்லாவியாதிகளையும் நிவர்த்தி செய்யும். மலச்சிக்கலில்லாமல் அன்றாட மலத்தை அன்றாடம் கழிக்கும் இந்தலேகியத்தை சாப்பிடுகிற அளவு முதலிய விபரத்தை மருந்து டப்பியுடன் அனுப்பும் பத்தியநோட்டீசில் பார்த்துக்கொள்ளலாம்.

1-சேர் லேகியம் விலை ரூபா—1.

[illegible] பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ.,

'நாராயணவிலாஸ்'

பெரம்பூர் பாரெக்ஸ், போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

கண்ணாட்டிச் சிந்து.

வெண்பா.

விண்ணாடரேத்தரிய வேலவன்மேல்வையமிசை
கண்ணாட்டிச்சிந்தாகக் கழறுதற்குத்-தண்ணாருஞ்
சோலைதிகழுந்தணிகை சுந்தரவிநாயகன்பொற்
றாளைவணங்கிச் சாற்றுவாம்.

இந்துவழ்சுந்தரனார் தந்தவொய்யாரன்
கண்ணாட்டிதந்த வொய்யாரன்
செந்தணிகைவாழ்செங்கல்வ ராயகெம்பீரன்
கண்ணாட்டி ராயகெம்பீரன் க

பச்சைமயிலேறிவரு முச்சிதவேலன்
கண்ணாட்டி உச்சிதவேலன்
இச்சையுடன்போற்றுபவர்க் கீந்திடுஞ்சீலன்
கண்ணாட்டி யீந்திடுஞ்சீலன் உ

கானக்குறவள்ளிமகிழ் கடம்பணிதோளன்
கண்ணாட்டி கடம்பணிதோளன்
வானவரிடாதவிர்த்தே வயங்குந்தயாளன்
கண்ணாட்டி வயங்குந்தயாளன் ௩

தெய்வகுஞ்சரிமகிழுஞ் செங்கதிர்வேலன்
கண்ணாட்டி செங்கதிர்வேலன்
சைவமறையோனெனவுஞ் சாற்றுஞ்சுசீலன்
கண்ணாட்டி சாற்றுஞ்சுசீலன் ௪

ஒன்னலர்புரமெரித்தோ னுதவியபாலன்
கண்ணாட்டி உதவியபாலன்
தன்னிகரில்லாதகொடுந் தானவர்காலன்
கண்ணாட்டி தானவர்காலன் ௫

ஆணிப்பொன்னேரத்தினமே லாசைக்கிளியே
கண்ணாட்டி ஆசைக்கிளியே
மாணிக்கமேமாங்குயிலே வார்த்தைக்கேளடி
கண்ணாட்டி வார்த்தைக்கேளடி ௬

சித்தர்முத்தர்பணி சேவற்கொடியோன்
கண்ணாட்டி சேவற்கொடியோன்
வெற்றிமயிலேறியேநம் வினைகள்தீர்ப்பவன்
கண்ணாட்டி வினைகள்தீர்ப்பவன் ௭

ரஞ்சிதஞ்சேரஞ்சுகமே நங்கையேமானே
கண்ணாட்டி நங்கையேமானே
கொஞ்சுங்கிளியாளேநாமுங் கூடியேபோவோம்
கண்ணாட்டி கூடியேபோவோம் ௮

ரத்தினபுலாக்குநம்மல் முகத்தில்மின்னுதே
கண்ணாட்டி முகத்தில்மின்னுதே
முத்துமாலைமோகனமுங் கழுத்திற்றன்னுதே
கண்ணாட்டி கழுத்திற்றன்னுதே கூ

தங்கத்தினில்கல்லிழைத்த வங்கிதோடாவாம்
கண்ணாட்டி வங்கித்தோடாவாம்
சங்கையில்லாமல்கரத்தில் தகதகென்னுதே
கண்ணாட்டி தகதகென்னுதே கo

பத்தரைமாற்றுத்தங்கத்தால் கைவளையலாம்
கண்ணாட்டி கைவளையலாம்
சித்திரவிசித்திரமொளிர் செம்பொன்மோதிரம்
கண்ணாட்டி செம்பொன்மோதிரம் கக

கல்லிழைத்தஒட்டியாணம் இடையில்மின்னுதே
கண்ணாட்டி இடையில்மின்னுதே
பல்லொளிகள்முகத்தைப்போலேபளபளென்குதே
கண்ணாட்டி பளபளென்குதே கஉ

பாதமிரண்டில்சதங்கை கீதம்பாடுதே
கண்ணாட்டி கீதம்பாடுதே
சீதமதிமுகத்தைக்கண்டேன் சித்தம்வாடுதே
கண்ணாட்டி சித்தம்வாடுதே கந

சந்திரகாந்திசரிகைசேலை தளதளென்குதே
கண்ணாட்டி தளதளென்குதே
சுந்திரவடிவழகி சிந்தைசோருதே
கண்ணாட்டி சிந்தைசோருதே கச

நெத்தியில்திலர்தபொட்டு நிகநிகென்னுதே
கண்ணாட்டி நிகநிகென்னுதே
குத்தினிரவிக்கையது மெத்தஜொலிக்குதே
கண்ணாட்டி மெத்தஜொலிக்குதே கரு

மல்லிகைமுல்லைமுடிகரு மாங்குயிலாளே
கண்ணாட்டி மாங்குயிலாளே
வல்லிமேலகமவல்வினைகள் தீர்ந்திடும்பாராய்
கண்ணாட்டி தீர்ந்திடும்பாராய் கசா

சதுர்மறைபுகலுமிந்த சரவணப்பொய்கை
கண்ணாட்டி சரவணப்பொய்கை
விதியின்படியேயதனில் மூழ்குவோம்வாராய்
கண்ணாட்டி மூழ்குவோம்வாராய் கஎ

வேலவனைச்சேவைசெய்ய வினைகள்தீருமே
கண்ணாட்டி வினைகள்தீருமே
பாலசுப்ரமணியவன் பதங்கள்வாய்க்குமே
கண்ணாட்டி பதங்கள்வாய்க்குமே கஅ

அணியணியாயிருக்குமன்ன சத்திரம்பாராய்
கண்ணாட்டி சத்திரம்பாராய்
பணிமணிகள்விற்குமிந்த பக்குவம்பாராய்
கண்ணாட்டி பக்குவம்பாராய் ௧௯

வேதியர்கள்வேள்விசெய்யுஞ் சாலைகள்பாராய்
கண்ணாட்டி சாலைகள்பாராய்
சீதமதர்பூத்தொளிருஞ் சோலைகள்பாராய்
கண்ணாட்டி சோலைகள்பாராய் ௨0

ஆறுமுகம்பவனிவரும் அற்புதம்பாராய்
கண்ணாட்டி அற்புதம்பாராய்
வீறுசேர்முரசதிரும் விந்தையைத்தேராய்
கண்ணாட்டி விந்தையைத்தேராய் ௨௧

அடியவர்கள்கூட்டமதை அன்னமேபாராய்
கண்ணாட்டி அன்னமேபாராய்
வடிவழகிகடைகளிதோ வயங்குதுசீராய்
கண்ணாட்டி வயங்குதுசீராய் ௨௨

மனதின்படிவேனதெல்லாம் வாங்குவோம்வாராய்
கண்ணாட்டி வாங்குவோம்வாராய்
கனமுல்லவுங்கருங்குயிலே கவலையேன்கூறாய்
கண்ணாட்டி கவலையேன்கூறாய் ௨௩

கார்த்திகையின் பெருமையதை கருதப்போகுமோ
கண்ணாட்டி கருதப்போகுமோ
நாற்றிசையோர்போற்றிசெய்யும் நன்கதைப்பாறாய்
கண்ணாட்டி நன்கதைப்பாறாய் உ௪

அன்பர்கள் துதித்திரங்கும் ஆனந்தம்பாறாய்
கண்ணாட்டி ஆனந்தம்பாறாய்
இன்மயிலேயுனக்கு ஏகுவோம்வாறாய்
கண்ணாட்டி ஏகுவோம்வாறாய் உரு

பக்தியுடன்கங்காதரன் பாடுந்தமிழுக்கு
கண்ணாட்டி பாடுந்தமிழுக்கு
சித்தமகிழ்ந்தேயருளுஞ் செங்கல்வராயன்
கண்ணாட்டி செங்கல்வராயன் உ௬

மாமலர்ப்பதங்கள்வாழி மணமறைவாழி
கண்ணாட்டி மணமறைவாழி
பூமியிலிதைப்பகரும் புண்ணியாவாழி
கண்ணாட்டி புண்ணியர்வாழி உ௭

கண்ணாட்டிச்சிந்து.

முற்றிற்று.